4th March 1968]

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கத்தில் (Co-operative Supply and Marketing Society) அரிசி ஆலை கட்டுவதில் ஊழல் கையாடல் நடப்பதைக் குறித்துத் தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆமெனில் , அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்த அரிசி ஆலை கட்டுவதற்குரிய செலவை விட அதிகமாகவும் விபரங்களின்றியும் செலவிட்ட தொகையை அதற்குக் காரணமானவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, அப்படி அதிகமாக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ? அதை யார் யாரிடமிருந்து வசூலிக்க உத்தரவு போடப்பட்டு இருக்கிறது ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவரவர்களே, அந்தக் கட்டடம் கட்ட முன் அனுமதி வாங்கப்பட்டது. அந்த முன் அனுமதியில் இவ்வளவு தொகைக்கு வாங்கவேண்டுமென்று போடப்பட்டு, அதற்கு மேலும் தொகை செலவழிக்கப்பட்டு இருக்கிறது. அது ஒரு குற்றச்சாட்டு. அதற்கு யார் பொறுப்பாளி என்பதைக் கண்டு பிடித்து அதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது போடப்பட்டிருக்கும் தொகை அவர்கள் செலவழித்த தொகைக்குச் சரியாக இருக்கிறதா என்று அஸிஸ்டெண்ட் எஞ்சினீயர், கூட்டுறவு இலாகாவில் பணியாற்றுபவர் மூலமாக விசாரிக்கப்பட்டு அவர்கள் இன்றைக்கு எவ்வளவு செலவழித்து இருக்கிறார்களோ, எவ்வளவு பெறும் என்று கணக்குப் போட்டு பார்த்து 3,565·63 ரூபாய் அதிகமாகச் செலவழித்திருக்கிறார்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தத் தொகைக்கு யார் யார் பொறுப்பாளி என்பதைக் கண்டுபிடித்து அவர்களிடமிருந்து வசூலிக்க சொல்லப்பட்டிருக்கிறது.

Peoples' Co-operative Bank, Nagercoil

*166 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether any complaint has been received in March last regarding the frauds committed by the Sectretary, Peoples' Co-operative Bank at Nagercoil in the past few years ; and

(*b*) if so, the action taken thereon ?

நாகர்கோவில் பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கி

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கியின் காரியதரிசி கடந்த சில வருடங்களாக வங்கியில் செய்து வரும் ஊழல்கள் பற்றி சென்ற மார்ச் மாதத்தில் ஏதாவது புகார் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்த வங்கியின் செயல் முறைகளைப் பற்றி விசாரிக்கப்பட்டது. வங்கிக்குச் சேர வேண்டிய காலங்கடந்த பாக்கிகளை வசூலிப்பதற்கு உடனே நடவடிக்கை எடுக்கும்படி நாகர் கோவில் உதவிப்பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது.

வங்கியின் நிர்வாகக்குழு பாக்கிகளை வசூலிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பாக்கிகள் வசூலிக்கப்படுவதை கவனித்துக் கொண்டிருக்கும்படியும், அவசியமானால் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்யும்படியும் திருநெல்வேலி கூட்டுப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கியின் செயலாளர் வங்கிக்கு வரவேண்டியதாகிய ரூ. 15 ஆயிரம் கடனுக்கு ஜாமீனாக கொடுக்கப்பட்ட சொத்தை தன்னுடைய சகோதரி பெயரில் வாங்கி வைத்துக்கொண்டு வங்கிக்கே கடன் கொடுக்காமல் இருந்தார். பிறகு அந்த வங்கியின் பொதுக்குழு உறுப்பினன் என்ற நிலையில் நான் அதை எழுப்பிய பிறகு பாதி வட்டியைக் கழித்து அந்தக் கடனை வசூல் செய்வதாகச் செய்திருக்கிறார்கள். இதனால் வங்கிக்கு ரூ. 10 ஆயிரத்திற்கு மேல் பாக்கியிருக்கிறது. இதை அந்த நபரிடமிருந்து வசூல் செய்வதற்கு முடிவு செய்திருக்கிறோம். பொதுவாக கணக்குப்போடுவது என்பது சர்குலரிலேயே இருந்துவருவது ஊழல் செய்கிறவர்களுக்கு ஊக்கமூட்டுகிற மாதிரி இருக்கிறது. அந்த ஊழலில் உள்ள தொகையை தனி நபர்களிடமிருந்து வசூலிக்க உத்தரவு பிறப்பித்து கூட்டுறவு சங்கங்களில் இனிமேல் அதுபோன்ற ஊழல் நடவாமல் தடுக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஊழல் செய்வதில் இரண்டு வகை உண்டு. அகப்பட்டுக்கொள்ளும்படி ஊழல் செய்துவிட்டால் உடனடியாகக் கண்டிபிடிக்க முடிகிறது. விதிகளுக்கு உட்பட்டு ஊழல்களைச் செய்தால், யார் அதற்குப் பொறுப்பாளி என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. அவர், அதிலே பணியாற்றும் உறுப்பினர்களுக்கு வேண்டியவர்களுக்குச் சில சலுகைகள் அளித்து, அதுவும் விதிகளுக்கு உட்பட்டு செய்திருக்கிறார். அது கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் தொகை மட்டும் வசூலிக்கவேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொகை வசூலிக்க முடியாவிட்டால் நிச்சயமாக அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து அத்தொகையை வசூலிக்க முயற்சி எடுக்கப்படும்.

Annanji Co-operative Society and Stores

*167 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) The amount misappropriated in the Annanji Co-operative Society–Co-operative Stores situated adjacent to Theni, Madurai district ;

(*b*) the amount recovered through court of law ;

(*c*) the result of the stay order issued by the High Court ; and

(*d*) whether the amount has been collected ?

அன்னஞ்சி கூட்டுறவு சொசைடி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மதுரை ஜில்லா, தேனியை அடுத்த அன்னஞ்சி கூட்டுறவு சொசைட்டி, கூட்டுறவு ஸ்டோரில் கையாடல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?